## <u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்</u>

அசல் வழக்கு எண். 57/2021 மற்றும் 02/2023 நாள்– 19.11.2025

வாதியின் / பிரதிவாதியின் 1–ஆவது சாட்சியின் வாக்குமூலம் (1873ம் ஆண்டு சாட்சிய சட்டம் 44வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.இரா.கோகிலாவாணி, Gr.III பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர்– தங்கமாரிமுத்து (வா.சா.1) | தந்தையின் பெயர்– |
| விலாசம்– | தாலுகா– |
| வயது– | தொழில் |

நான் இந்த வழக்கின் வாதியாவேன். எனது முதல் விசாரணையை சாட்சியமான எழுத்துமூலமான நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். நிருபண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் யாவும் உண்மையானவை. மேலும் அதில் உள்ள சங்கதிகள் யாவும் என்னால் சொல்லப்பட்டு தயார் செய்யப்பட்டவைதான். நிருபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். என்னுடைய முதல் விசாரணையை ஏற்றுக் கொள்ள வேண்டுகிறேன். எனது தரப்பு ஆவணங்களாக கீழ்க்கண்ட ஆவணங்களை குறியீடு செய்கிறேன்.

1) வாதியின் தகப்பனார் சுப்பையாமவின் நத்தம் நிலவரித்திட்ட துாய திட்ட பட்டா எண்.315 அசல் **வா.சா.ஆ.1**

2) 30.04.2008 வாதியின் தந்தை சுப்பையா இறப்பு சான்றிதழ் அசல் **வா.சா.ஆ.2**

3) 27.05.2008 சுப்பையாவின் வாரிசு சான்றிதழ் அசல் **வா.சா.ஆ 3**

4) 23.01.2016 வாதியின் தாயார் வள்ளியம்மாள் இறப்பு சான்றிதழ் அசல் **வா.சா.ஆ.4**

5) 27.06.2012 வாதியின் சகோதரர் மாரீஸ்வரன் இறப்பு சான்றிதழ் அசல் **வா.சா.ஆ.5**

6) 24.09.2020 வாதியின் சகோதர சகோதரிகள் வாதிக்கு எழுதிக் கொடுத்த கிரையப் பத்திரம் அசல் **வா.சா.ஆ.6**

7) 15.03.2021 சாத்துார் வட்டாட்சியர் வாதிக்கு பட்டா பெயர் மாற்றம் செய்த உத்தரவு அசல் **வா.சா.ஆ.7**

8) 2015–2016, 2018–2019, 2019–2020, 2020–2021 ஆண்டுகளுக்கு வாதி நென்மேனி ஊராட்சிக்கு செலுத்திய தொழில் வரி ரசீதுகள் –4 அசல் **வா.சா.ஆ.8**

9) 01.09.2020 வாதியின் சகோதரர் மாரீஸ்வரனின் வாரிசு சான்றிதழ் அசல் **வா.சா.ஆ.9.**

பிராதில் கோரியபடி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**(வாதி வழக்கறிஞரின் வேண்டுகோளின் படி ஆவணங்களை குறியீடு செய்வதற்காக முதல் விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)**